**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காதது ஏன்?

## தமிழக ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கேள்வி

**புது தில்லி, நவ. 20:** தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் 3 ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்துகொண்டிருந்தார் என்று உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை கேள்வி எழுப்பியது.

தமது குறைகளுடன் மாநில அரசுகள் உச்சநீதிமன்றத்தை அணுகும் வரை, மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காத்திருப்பது ஏன் என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

**ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:** கடந்த 2020 முதல் 2023-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 12 மசோதாக்கள், மாநில ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன.

அவற்றில் சென்னைப் பல்கலைக்கழகத்தைத் தவிர, பிற பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை ஆளுநர் நியமிப்பதற்குப் பதிலாக அரசே நியமிக்கும் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்ப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் அடங்கும்.

இதேபோல ஊழல் தடுப்புச் சட்டம் 1988-இன் கீழ், மக்கள் பிரதிநிதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் கோரி அனுப்பப்பட்ட 4 கோப்புகள், தண்டனைக் காலம் நிறைவடைவதற்கு முன்பே சிறைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பான 54 கோப்புகள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 316-இன் கீழ் தமிழ்நாடு அரசுப்



பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக வழங்கப்பட்ட பரிந்துரைகளும் ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன.

**தமிழக அரசுடன் ஒத்துழைக்காமல்...:** சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை நிலுவையில் வைப்பது, தினசரி கோப்புகள், நியமன உத்தரவுகள், சிறைக் கைதிகள் தண்டனைக் குறைப்பு உத்தரவுகளில் கையொப்பமிடாதது, மக்கள் பிரதிநிதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்காதது போன்ற நடவடிக்கைகளால் தமிழக அரசு நிர்வாகம் முடங்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார். மேலும், அவர் தமிழக அரசுடன் ஒத்துழைக்காமல் விரோத மனப்பான்மையை உருவாக்குகிறார்.

**வேண்டுகோள்:** அரசமைப்புச் சட்டத்துக்கு இணங்காத அவரின் செயல்பாட்டை சட்டவிரோதமானது என்று அறிவிக்க வேண்டும். அத்துடன் மசோதாக்கள், அரசு உத்தரவுகள் மீது ஆளுநர் முடிவு எடுக்க கால வரம்பை நிர்ணயிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த மனு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்



கிய அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கூறியதாவது:

மசோதாக்களைப் பொருத்தவரை, பஞ்சாப் ஆளுநருக்கு எதிராக இதேபோன்ற வழக்கில் உச்சநீதிமன்றம் நவ.10-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவுக்குப் பின்னர், மாநில அரசுக்கு மசோதாக்களை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பியுள்ளார்.

கடந்த 2020-ஆம் ஆண்டுமுதல் அந்த மசோதாக்கள் ஆளுநரிடம் நிலுவையில் இருந்துள்ளன. 3 ஆண்டுகளாக அவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்று அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி (ஆளுநர் தரப்பு) கூற வேண்டும் என்றார் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்.

**ஆளுநரின் அதிகாரத்தைப் பறிப்பது தொடர்பாக சச்சரவு:** இதைத் தொடர்ந்து, அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி வாதிட்டதாவது: தமிழக பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதில் ஆளுநரின் அதிகாரத்தைப் பறிக்கும் மசோதாக்கள் தொடர்பாகத்தான் தற்போது சச்சரவு நிலவுகிறது.

இது முக்கியமான விவகாரம் என்பதால், மசோதாக்கள் குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை உள்ளது. மேலும், கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பரில்தான் தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றார். அதற்கு முன்பே மசோதாக்கள் நிலுவையில் இருந்தன என்று வாதிட்டார்.

**ஆளுநர் அலுவலகம் முறைப்படி செயல்படுகிறதா?:** ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்ற காலம் குறித்த வாதத்தை ஏற்க மறுத்து நீதிபதிகள் கூறியதாவது: தற்போதைய விவகாரம் என்பது எந்த ஆளுநர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க தாமதித்தார் என்பது குறித்து அல்ல. பொதுவாகவே, அரசமைப்புச் சட்ட கட்டமைப்பின்படி, ஆளுநர் அலுவலகம் செயல்படுகிறதா என்பது குறித்ததாகும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதன் பின்னர் தமிழக அரசு சார்பாக ஆஜரான மூத்த வழக்குரைஞர்கள் முகுல் ரோத்தகி, ஏ.எம்.சிங்வி ஆகியோர் வாதிட்டதாவது: இந்த வழக்கு தொடர்பாக பதிலளிக்க உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பிய பின்னர், சில மசோதாக்களுக்கு ஒப்புதலை நிறுத்திவைத்ததாக ஆளுநர் கூறினார்.

இதைத் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு, மாநில அரசுக்கு ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளன.

எந்தவொரு காரணமும் சொல்லாமல் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்குவதை ஆளுநர் நிறுத்தி வைக்க முடியாது. எனினும், மசோதாக்களைத் திருப்பி அனுப்பிய போது, 'ஒப்புதலை நிறுத்திவைப்பதாக' என்ற ஒற்றை வரியை மட்டும் ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

**15 மசோதாக்கள் நிலுவை:** தற்போது ஆளுநரிடம் 15 மசோதாக்கள் நிலுவையில் உள்ளன. அவற்றில் 10 மசோதாக்கள் சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டவையாகும் என்று தெரிவித்தனர்.

**இதையடுத்து நீதிபதிகள் அமர்வு கூறியதாவது:** அரசமைப்புச் சட்டப் பிரிவு 200-இன்படி, மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்கலாம், ஒப்புதலை நிறுத்திவைக்கலாம், குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பலாம் மற்றும் சட்டப்பேரவையின் மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பலாம்.

அதேவேளையில், சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஆளுநரால் அனுப்ப முடியுமா என்று கேள்வி எழுப்பியது. அதற்குப் பதிலளித்த வழக்குரைஞர்கள் சிங்வி மற்றும் ரோத்தகி, 'அவ்வாறு செய்ய முடியாது' என்று தெரிவித்தனர்.

**டிச.1-க்கு ஒத்திவைப்பு:** இதைத் தொடர்ந்து, சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு திரும்ப அனுப்பப்பட்டுள்ளதைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிபதிகள், ஆளுநரின் அடுத்த முடிவுக்காகக் காத்திருக்கும் வகையில் வழக்கு விசாரணையை டிச.1-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான நீதிமன்ற விசாரணைக்கு ஆளுநர் அனுமதி

**புது தில்லி, நவ. 20:** குட்கா முறைகேடு வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பி.வி.ரமணா, சி.விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையைத் தொடங்க ஆளுநர் ஆர்.என்.ரவி கடந்த 13-ஆம் தேதியே ஒப்புதல் அளித்துவிட்டதாக உச்சநீதிமன்றத்தில் ஆளுநர் மாளிகை திங்கள்கிழமை தெரிவித்தது.

குட்கா முறைகேடு வழக்கில் முன்னாள் அதிமுக அமைச்சர்கள் பி.வி. ரமணா, சி.விஜயபாஸ்கருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பான உயர்நீதிமன்ற உத்தரவில் சிபிஐ வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் நீதிமன்ற விசாரணையைத் தொடங்க ஆளுநரிடம் அனுமதி கோரப்பட்டது.

சிபிஐயின் கோரிக்கையை மாநில அமைச்சரவை கடந்த ஆண்டு செப்டம்பர் 22-ஆம் தேதி ஆளுநரிடம் சமர்ப்பித்தது. ஆனால், கடந்த 14 மாதங்களாக இந்தக் கோரிக்கை தொடர்பாக ஆளுநர் பதிலளிக்கவில்லை. இதனால் வழக்கில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் தாக்கல் செய்த மசோதாகளுக்கு அனுமதி தர மறுப்பதாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் ஆளுநர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில், 'அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 13-ஆம் தேதியே ஆளுநர் ஒப்புதல் அளித்துவிட்டார். மேலும், அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீதான ஊழல் வழக்கில் விசாரணையைத் தொடங்க சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இணையதளம் மூலம் நில அளவை விண்ணப்பம்

## புதிய வசதியை தொடங்கிவைத்தார் முதல்வர்

**சென்னை, நவ. 20:** தமிழகத்தில் நில அளவை மேற்கொள்ள இனி இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இதற்கான சேவை வசதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நில உரிமையாளர்கள் தங்களது நிலங்களை அளவீடு செய்ய சம்பந்தப்பட்ட வட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டிய நிலை இருந்தது. இதை மாற்றி, பொது மக்களின் வசதிக்காக எந்த நேரத்திலும், எந்த இடத்திலுமிருந்து நில அளவை செய்ய விண்ணப்பிக்கும் புதிய வசதி தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி, இணையவழியில் விண்ணப்பிக்க http://tamilnilam.tn.gov.in/citizen -என்ற புதிய இணையதள சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இணையதளம் மூலம் நில அளவைக்கு விண்ணப்பிக்கும் புதிய வசதியை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக திங்கள்கிழமை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்தப் புதிய சேவை மூலம், பொதுமக்கள் நில அளவை செய்ய வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை. நில அளவைக்கான கட்டணம் உள்பட பல்வேறு வகைக் கட்டணங்களைச் செலுத்தவும் வங்கிகளுக்கு நேரில் செல்ல வேண்டியதில்லை. இணைய வழியில் செலுத்தி, விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நில அளவை செய்யப்படும் தேதி மனுதாரருக்கு குறுஞ்செய்தி அல்லது கைப்பேசி வழியாகத் தெரிவிக்கப்படும். மேலும் நில அளவை செய்யப்பட்ட பிறகு, மனுதாரர் மற்றும் நில அளவையர் கையொப்பமிட்ட அறிக்கை அல்லது வரைபடம் ஆகியவற்றை http://eservices.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், ஆர்.காந்தி, சி.வி.கணேசன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நில நிர்வாக ஆணையர் சு.நாகராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலர் வே.ராஜாராமன், நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநர் மதுசூதன ரெட்டி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வடசென்னை - புரிதல் வேண்டும்!

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னைப் பெருநகரத்தின் சரிபாதி வடசென்னைப் பகுதி. அப்பகுதி மக்களின் சமூக, பொருளாதார, உளவியல் நல மேம்பாட்டிற்காக, 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்' என்னும் பெயரில் ரூபாய் ஆயிரம் கோடி ஒதுக்கியிருக்கிறது தமிழ்நாடு அரசு. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ஆகிய அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து இத்திட்டத்திற்கான பணிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

கடந்த 3.11.2023-ஆம் நாள் அமைச்சர் சேகர்பாபு தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்' தொடர்பான கலந்தாய்வுக் கூட்டத்தில், திருவொற்றியூர் பகுதியில் மீனவ மக்கள் நலன், குடிநீர், வடிகால், மருத்துவமனை, கல்விக் கூட பராமரிப்பு போன்ற வழக்கமான பொதுவான குறைகள் குறித்தே கலந்தாய்வு செய்யப்பட்டிருக்கிறது. கூடுதலாக அக்கலந்தாய்வில் போதைப் பழக்க அடிமைகளுக்கான மறுவாழ்வு மையங்களை அமைப்பது குறித்தும் விவாதித்துள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் சென்னைப் பெருநகரத்தின் மையப் பகுதிகளில் இருந்து வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான உதிரித் தொழிலாளர்களின் குடும்பங்கள், தற்போது கண்ணகி நகர் போன்ற சென்னையைச் சுற்றியுள்ள தொலைத் தூரத்துப் புறவெளிப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன. பெற்றோரின் வேலைவாய்ப்பு இழப்பு, இடைநிற்றலுக்கு உள்ளான அவர்களது பிள்ளைகளின் கல்வி, உறவுகளின் பிரிவு, சென்னைக்குள் வந்து திரும்பவேண்டிய பயணத்துக்கான நேரம் மற்றும் பொருட்செலவு போன்ற பல்வேறு துயரங்களை அந்த மக்கள் இன்னமும் அனுபவித்து வருகின்றனர். அத்தகைய ஆபத்து நேருமானால் அதிலிருந்து வடசென்னை மக்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

நமது சென்னைப் பெருநகரத்தின், மிகவும் குறிப்பாக வடசென்னைப் பகுதிகளின், சொந்த வாழ்விடங்களற்ற லட்சக்கணக்கான ஆண் - பெண் உதிரித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய உரிய தரமான வாழ்விட வசதிகள் செய்து தரப்படவில்லை. அப்பகுதிகளில் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளும் தேவையின் அளவை ஈடு செய்யப் போதுமானதாக இல்லை. பத்துப் பதினைந்து ஆண்டுகளாவது உறுதியாகத் தாக்குப்பிடித்து நிற்கும் அளவுக்கு அவை தரமாகவும் இருப்பதில்லை.

மத்திய சென்னை, தென் சென்னை ஆகிய முன்னொட்டுப் பெயர்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றதுதான். முதலில் அமைந்த முதன்மையான சென்னை 'வடசென்னை' எனப் பெயர் பூண்டது. ஆக, இன்றைய வடசென்னை என்பது தொன்மையானதாகவும், இந்திய தொழில் துறை வளர்ச்சியின் முதன்மையான களமாகவும், தென்னிந்தியாவின் மாண்பிற்குரிய முகமாகவும் விளங்கியது. இன்றளவும் அவ்வாறே விளங்கிக் கொண்டிருக்கிறது.


ஜெயபாஸ்கரன்

நிலவழிப் போக்குவரத்தின் மிகப்பெரிய புரட்சியாக 1856-ஆம் ஆண்டு 'சென்ட்ரல்' தொடர்வண்டி நிலையம் அமைந்தது. அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் நீர்வழிப் போக்குவரத்தின் மிகப்பெரிய புரட்சியாக சென்னைத் துறைமுகம் அமைந்தது. இவ்விருவகையான போக்குவரத்து வசதிகளை அடிப்படையாக வைத்து வடசென்னைப் பகுதியில் மிகப்பெரிய, நடுத்தர தொழிற்சாலைகளும், சிறு, குறு தொழிற்கூடங்களும் ஏராளமாக உருவாகின.

பெருமளவிலான கச்சாப்பொருள்கள் மற்றும் தயாரிப்புப் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதி முறைமைகளில் சென்னை சென்ட்ரல் தொடர்வண்டி நிலையமும், சென்னைத் துறைமுகமும் ஒன்றிணைந்து தென்னிந்தியத் தொழில்துறையில் ஓர் உறுதியான கட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

**காலங்காலமாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கை முறைகளையும், மோதல்களையும் அந்த ஒட்டுமொத்த நிலப்பகுதிக்கே உரியவையாக மாற்றி அப்பகுதியைத் தரம் தாழ்த்துவதை சில திரைப்படைப்பாளிகள் தங்களது கொள்கையாகவே கொண்டுள்ளனர். இது அந்த மக்களுக்குச் செய்யப்படுகின்ற ஊடகவியல் இரண்டகமாகும்.**

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன், பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட மிகப்பெரிய நிறுவனங்கள் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான பிற நிறுவனங்களும் இவ்விரு போக்குவரத்து மையங்களை அடிப்படையாக வைத்தே இயங்கி வருகின்றன.

பொருள் போக்குவரத்துத் தேவைகளின் பொருட்டு பின்னர் உருவான எண்ணூர் காமராசர், காட்டுப்பள்ளி துறைமுகங்களும், மேலும் சில காசிமேடு உள்ளிட்ட முதன்மையான மீன்பிடித் துறைமுகங்களும் அப்பகுதியில் உண்டு.

2004-ஆம் ஆண்டு கணக்கின்படி சென்னைத் துறைமுகத்தில் மட்டும் 8,000 பணியாளர்கள் இருந்துள்ளனர். இப்போது இந்தக் கணக்கு நிச்சயமாகக் கூடியிருக்கும். இந்த அடிப்படையில் வடசென்னையின் பிற பெருநிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து வகை தொழிற்பணிக் களங்களிலும் பல லட்சக்கணக்கான நிரந்தர, ஒப்பந்த, உதிரித் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆக, வடசென்னை என்பது ஆயிரக்கணக்கான தொழில்களும் அவற்றின் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் பின்னிப்பிணைந்து வாழுகின்ற உன்னதமானதொரு நகர்ப்பகுதியாக விளங்குகிறது.

ஆனால், இதில் மிகப்பெரிய வேதனை என்னவென்றால், இந்தத் தொழிலாளர்களின் பணியிடமும் வாழ்விடமுமாக விளங்குகின்ற அந்த வடசென்னைப் பகுதிகளைத்தான், வெட்டுக்குத்துக் கலாசாரப் பகுதிகளாகவும், அச்சமூட்டும் வன்முறை நிறைந்த ஆபத்துப் பகுதிகளாகவும், கட்சி அரசியல் போட்டிகளின் சண்டைக்களமாகவும், புற்றீசல்களைப் போல மிகப் பெரிய தாதாக்கள் முதல் அவர்களுக்குக் கட்டுப்பட்ட சிறிய தாதாக்கள் வரை உலவுகின்ற நிலப்பிரதேசமாகவும் விளங்குவதாக அண்மைக்கால நமது தமிழ்த் திரைப்படங்கள் சித்திரிக்கின்றன.

கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியிருக்கின்ற, காலங்காலமாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற லட்சக்கணக்கான தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கை முறைகளையும், அவர்களது சிறுசிறு முரண்களையும், மோதல்களையும் அந்த ஒட்டுமொத்த நிலப்பகுதிக்கே உரியவையாக மாற்றி அப்பகுதியைத் தரம் தாழ்த்துவதை சில திரைப்படைப்பாளிகள் தங்களது கொள்கையாகவே கொண்டுள்ளனர். இது அந்த மக்களுக்குச் செய்யப்படுகின்ற ஊடகவியல் இரண்டகமாகும்.

இந்திய அரசின் பாதுகாப்புத் துறையில் முதுநிலை விஞ்ஞானியாகப் பணியாற்றுகின்ற ஒருவர், தான் எழுதிய அறிவியல் நூலினை வடசென்னையில் தான் படித்த பள்ளியில், அப்பள்ளியில் படித்துவருகின்ற மாணவர்களின் முன்னிலையில் வெளியிடுவதையும், அந்த அவரது விழாவுக்கு உலக அளவில் புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானிகளையும் பிறதுறை முன்னோடிகளையும் அழைத்து வந்து உரையாற்ற வைப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அது குறித்து அவரிடம் கேட்டபோது, 'வடசென்னைப் பகுதியில் இருந்தும் இவ்வாறான ஆளுமைகள் உருவாக முடியும் என்று இப்பகுதியின் மக்களுக்கு மிகவும் குறிப்பாக மாணவ - மாணவிகளுக்குத் தொடர்ந்து சொல்லவேண்டியிருக்கிறது. வடசென்னையை வேறு மாதிரியாகச் சித்திரித்துக் காட்டி நம்மைப் போன்றவர்கள் இப்படியெல்லாம் செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்திவிட்டார்கள்' என்று வருத்தப்பட்டுச் சொன்னார் அவர். இந்த உளவியல் ஆய்வுப் பார்வையே நிகழ்கால வடசென்னைக்கான, முதன்மையான தேவையாக இருக்கிறது.

இதுபோன்ற சிக்கல்களைக் கருத்தில் கொண்டே வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில், அப்பகுதி மக்களின் 'உளவியல்' சார்ந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. மேலும் கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை என்பதைப்போல வடசென்னை மக்களின் வாழ்நிலையைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கின்ற எவர் ஒருவருக்கும் அது வெளிப்படையாகவே தெரியக்கூடியதாகத்தான் இருக்கிறது.

வடசென்னைப் பகுதிகளில் சென்னையின் பிற பகுதிகளில் இருப்பதுபோல குறிப்பிடத்தக்க உயர்நிலைக் கல்வி நிறுவனங்கள், கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்கான நிரந்தரமான அரங்குகள், அனைத்து வகை விளையாட்டுகளுக்குமான முறையான பயிற்சிக் கூடங்கள், மாணவ - மாணவிகளுக்கான விளையாட்டுத் திடல்கள், தொலைதூர நகர்களுக்கான பேருந்து நிலையங்கள், மீன்பிடித்தல் உள்ளிட்ட தொழில் சார்ந்த கற்றல் மையங்கள் போன்ற எதுவும் போதுமான அளவிலும் தரமானதாகவும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால் சென்னையின் பிற பகுதிகளில் தோன்றியிருப்பதைப் போன்ற நவீன பெருவணிக வளாகங்கள் கூட குறிப்பிடத்தக்க அளவுக்கு அங்கு தோற்றுவிக்கப்படவில்லை.

சென்னைப் பெருநகரத்தின் பாதி நிலப்பரப்பையும், சரிபாதி மக்கள்தொகையையும் கொண்டதாக வடசென்னை விளங்குகிறது. அரசின் நிர்வாகத் துறைகளால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக வஞ்சிக்கப்பட்ட பகுதி என்று வடசென்னையை வரையறை செய்தாலும் அது மிகையில்லை.

இந்தப் பின்னணியில் தமிழ்நாடு அரசு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி முன்னெடுத்துள்ள 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்' மிகவும் விரிவாகவும் தொலைநோக்குப் பார்வையோடும் செயல்படுத்தப்பட வேண்டும்.

வடசென்னை மக்களின், மிகவும் குறிப்பாக அப்பகுதியின் பல லட்சக்கணக்கான மாணவ - மாணவிகளின் உளவியல் நலன்களும், அவர்களின் எதிர்கால நம்பிக்கைகளும், லட்சியக் கனவுகளும் ஊக்கப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். உலகப் பெருவெளியில், மாண்புகள் நிறைந்த வடசென்னைப் பகுதிகளின் பல்தரப்பட்ட சேவைகள் உரத்தொலிக்கப்பட வேண்டும். முதலில் அந்தப் பகுதிகளைப் பற்றிய தாக்குதலான, புரிதலற்ற, பொறுப்பற்ற ஊடக சித்திரிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

கட்டுரையாளர்:
கவிஞர்.

# வாக்குறுதிகள் வாய்ப்பளிக்குமா?

பெ. சுப்ரமணியன்

தற்போது நடைபெற்றுவரும் மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மிஸோரம், தெலங்கானா ஆகிய 5 மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல்கள் இதுவரை இல்லாத அளவுக்கு பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் பெற்றதாக உள்ளன. இந்தத் தேர்தலின் முடிவுகள் தேசிய, மாநில அரசியல் கட்சிகளிடையே மட்டுமின்றி அரசியல் நோக்கர்கள் மத்தியிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெற பல்வேறு காரணங்கள் உள்ளன. இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள 18-ஆவது மக்களவைத் தேர்தலுக்கான முன்னோட்டமாகவே இந்தத் தேர்தல் கருதப்படுகிறது. மேலும், இந்த 5 மாநிலங்களிலிருந்து மக்களவைக்கு 88 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர் என்பதும், இந்தியாவின் மொத்த வாக்காளர்களில் ஆறில் ஒரு பங்கினரை இந்த மாநிலங்கள் கொண்டுள்ளன என்பதாலும் இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தேர்தல் நடைபெறும் இந்த மாநிலங்களில் ஆளும் கட்சிகள் ஆட்சியைத் தக்கவைக்கவும், எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றவும் வேண்டி வேட்பாளர்கள் தேர்விலும், தேர்தல் வாக்குறுதியிலும் கவனம் செலுத்தியுள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளும் புதியவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளன. மத்திய அமைச்சர்கள், மக்களவை உறுப்பினர்களும் இந்தத் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் வாக்குறுதிகளைப் பொருத்தவரை ஒவ்வொரு மாநிலத்துக்கு ஏற்ப வேறுபட்டாலும் குறிப்பிட்ட சில வாக்குறுதிகள் மட்டும் அனைத்துக் கட்சிகளாலும் அனைத்து மாநிலங்களிலும் அறிவிக்கப்பட்ட பொதுவான வாக்குறுதிகளாக உள்ளன. அத்தகைய வாக்குறுதிகள் பெண் வாக்காளர்களின் வாக்குகளைக் கவரும் வகையில் உள்ளன. இதற்கு பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஒருபுறமிருந்தாலும் அவர்களின் வாக்களிக்கும் ஆர்வமே முக்கியக் காரணமாகும்.

தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் மிஸோரம், சத்தீஸ்கர் மாநிலங்களில் பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகமாகவும், இதர மாநிலங்களில் ஆண் வாக்காளர்களுக்கு இணையாகவும் உள்ளது. முந்தைய தேர்தலுடன் ஒப்பிடுகையில் ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அனைத்து மாநிலங்களிலும் அதிகரித்துள்ளது.

ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், வாக்களிப்பது குறைவாகவும் பெண் வாக்காளர்கள் வாக்களிப்பது அதிகமாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக, மத்திய பிரதேசத்தில் கடந்த 2018-இல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2.64 கோடியாகவும், பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2.41 கோடியாகவும் இருந்தது; தற்போது முறையே 2.88 கோடி, 2.72 கோடி என உள்ளது.

வாக்களிப்பு விகிதம் முந்தைய தேர்தலுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. 2013-இல் 70.1%-ஆக இருந்த பெண்களின் வாக்களிப்பு விகிதம், 2018-இல் 74%-ஆக அதிகரித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் ஆண்களின் வாக்களிப்பு விகிதம் 2% அளவுக்கே உயர்ந்துள்ளது.

இதன் மூலம் அண்மைக் கால தேர்தல்களில் அரசியல் கட்சிகளின் வெற்றி வாய்ப்பை நிர்ணயிக்கும் காரணியாக பெண் வாக்காளர்கள் மாறி வருகின்றனர்.

அதனால், அரசியல் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருந்தாலும், அதிக அளவில் பெண்களின் வாக்குகளைக் கவரும் வகையில் உள்ளன. பெண்களுக்கு உதவித்தொகை, மிகக் குறைந்த விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியவைதான் இந்தத் தேர்தலில் பிரதான வாக்குறுதிகளாக உள்ளன. எனினும், மகளிரின் வாக்குகளைப் பெற பல்வேறு வகைகளில் முயற்சிக்கும் அரசியல் கட்சிகள், இந்தத் தேர்தலில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை.

ஒவ்வொரு மாநிலத்திலும் முதன்முறை வாக்காளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அவர்களின் வாக்குகளைக் கவரும்வகையில்கல்லூரிசெல்லும்மாணவ - மாணவிகளுக்கு பயணப்படி அவர்களது வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும் எனவும், ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரையில் இலவசக் கல்வி, கல்லூரி மாணவியருக்கு இலவசமாக இரு சக்கர வாகனம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் 679 தொகுதிகளில் பாஜக 643, காங்கிரஸ் 666 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. இவற்றில் பாஜக 80 பெண்களுக்கும், காங்கிரஸ் 74 பெண்களுக்கும் மட்டுமே வாய்ப்பு வழங்கியுள்ளன.

அதாவது, தேசிய கட்சிகளான பாஜக 12.4%, காங்கிரஸ் 11% அளவுக்கே வாய்ப்பளித்துள்ளன.

1987-இல் தனி மாநில அந்தஸ்து பெற்றது முதல் இதுவரையில் மிஸோரம் மாநிலத்தில் ஒன்று, இரண்டு என்ற ஒற்றை இலக்கத்தில்தான் பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த மாநிலத்தில் கடந்த 2018 தேர்தலில் 15 பெண்கள் போட்டியிட்டாலும் ஒருவர் கூட வெற்றி பெறவில்லை. இந்தத் தேர்தலில் 174 வேட்பாளர்களில் 16 பேர் பெண்களாவர். பாஜக சார்பில் 2 பெண்களும், காங்கிரஸ் சார்பில் 4 பெண்களும் போட்டியிடுகின்றனர்.

இந்திய அளவில் பெண் உறுப்பினர்களே இல்லாத சட்டப்பேரவை என்றால் அது மிஸோரம் சட்டப்பேரவைதான். இதில் வியக்கத்தக்கது என்னவெனில், தற்போது தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் இந்த மாநிலத்தில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம் (ஆண் வாக்காளர்கள்: 4,12,969, பெண் வாக்காளர்கள்: 4,38,925).

ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ் சார்பில் 27 பெண் வேட்பாளர்களும், பாஜக சார்பில் 24 பெண் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். முந்தைய தேர்தலுடன் ஒப்பிடுகையில் காங்கிரஸ் கூடுதலாகவும், பாஜக குறைவாகவும் பெண்களுக்கு வாய்ப்புகளை வழங்கியுள்ளன. இந்த மாநிலத்தில் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த வசுந்தரா ராஜே சிந்தியா உள்பட 3 பெண்கள் பாஜக சார்பில் போட்டியிடுகின்றனர்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் பெண்களின் வாக்குகளைக் கவரும் வாக்குறுதிகள்தான் அதிகம். பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் பொருட்டு வழங்கப்பட்ட வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

EVA STALIN IAS

# இந்தியா–ஆஸ்திரேலியா இடையே '2+2' அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

## பாதுகாப்பு உறவுகளை விரிவுபடுத்த விவாதம்

**புது தில்லி, நவ. 20:** இந்தியா-ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு, வெளியுறவுத் துறையில் '2+2' அமைச்சர்கள் பேச்சுவார்த்தை தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்தோ-பசிபிக் பிராந்திய நலனுக்காக இருநாட்டு பாதுகாப்பு உறவுகளை விரிவுபடுத்துவது குறித்து கூட்டத்தில் விவாதங்கள் நடைபெற்றன.

இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான 2-ஆவது '2+2' அமைச்சர்கள் பேச்சுவார்த்தை திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஆஸ்திரேலிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிசர்ட் மார்ல்ஸ், வெளியுறவு அமைச்சர் பென்னி வாங் ஆகியோர் பங்கேற்றனர்.

**இந்தோ–பசிபிக் பிராந்திய நலனுக்காக...:** கூட்டத்தில் பாதுகாப்புத் துறையில் விவாதிக்கப்பட்டவை தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், 'பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை ஆழமாக்குவது, இந்தியா-ஆஸ்திரேலியா இடையே ஏற்கெனவே உள்ள வலுவான உறவுக்கு மேலும் வலுசேர்க்கும்.

இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்காக மட்டுமின்றி, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்புக்கும் வலுவான இந்தியா-ஆஸ்திரேலியா பாதுகாப்பு கூட்டாண்மை அவசியம் என இருநாட்டு அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டனர். எனவே, பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுபடுத்துவதற்கான உறுதிப்பாட்டை அமைச்சர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையே தகவல் பரிமாற்றம் மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

கப்பல் கட்டுதல், கப்பல் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல், விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவை இருதரப்பு ஒத்துழைப்புக்கு சாத்தியமான துறைகள் என்று ராஜ்நாத் சிங் பரிந்துரைத்தார்.

மேலும், செயற்கை நுண்ணறிவு, நீர்மூழ்கி கப்பல் மற்றும் ஆளில்லா விமானம் (ட்ரோன்) எதிர்ப்பு போர் முறை மற்றும் இணையவெளி போன்ற முக்கிய ராணுவப் பயிற்சி அம்சங்களில் இரு நாட்டுப் படைகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்' எனத் தெரிவிக்கப்பட்டது.

**நிலைத்தன்மைக்காக செயல்படுவது அவசியம்:** கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பேசுகையில், 'உலகில் நிலையில்லா தன்மை நிலவும் கடந்த ஓராண்டில், இந்தியா-ஆஸ்திரேலியா உறவு பன்மடங்கு மேம்பட்டுள்ளது. சர்வதேச சூழலில் வடக்கு-தெற்கு, மேற்கு-கிழக்கு என்ற பிரிவினைகளும் ஆழமான அழுத்தங்களும் இன்று காணப்படுகிறது.


இச்சூழலில் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். எனவே, நிலைத்தன்மைக்காக நாள்தோறும் நாம் விழிப்புடன் செயல்படுவது மிகவும் அவசியம்' என்றார்.

கூட்டத்துக்கு முன்பாக, தில்லியிலுள்ள தேசிய போர் நினைவிடத்தில் ஆஸ்திரேலிய அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர். 4 அமைச்சர்களும் செவ்வாய்க்கிழமை கூட்டாக செய்தியாளர் சந்திப்பை நடத்த உள்ளனர்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஏடிபி ஃபைனல்ஸில் 7-ஆவது பட்டம்



## ஃபெடரர் சாதனையை முறியடித்தார் ஜோகோவிச்

**துரின், நவ. 20:** இத்தாலியில் நடைபெற்ற ஏடிபி ஃபைனல்ஸ் ஆடவர் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில், நடப்பு சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 7-ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார்.

முன்னதாக இப்போட்டியில், ஸ்விட்சர்லாந்து டென்னிஸ் நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர் 6 முறை கோப்பையை கைப்பற்றியதே சாதனையாக இருந்த நிலையில், தற்போது ஜோகோவிச் அதை முறியடித்திருக்கிறார்.

ஃபெடரர் 2003, 2004, 2006, 2007, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் கோப்பை வென்றிருக்க, ஜோகோவிச் 2008, 2012, 2013, 2014, 2015, 2022, 2023 சீசன்களில் சாம்பியன் ஆகியுள்ளார்.

துரின் நகரில், இந்திய நேரப்படி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற நடப்பு சீசன் இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான ஜோகோவிச் 6-3, 6-3 என்ற நேர் செட்களில், போட்டித்தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருந்த இத்தாலியின் ஜானிக் சின்னரை வீழ்த்தினார். இந்த ஆட்டம் 1 மணி நேரம் 43 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது.

இத்துடன் சின்னரை 5-ஆவது முறையாக சந்தித்த ஜோகோவிச், 4-ஆவது வெற்றியை பதிவு செய்திருக்கிறார். சின்னர் தனது அந்த ஒரு வெற்றியை நடப்பு ஏடிபி ஃபைனல்ஸின் குரூப் சுற்றில் ஜோகோவிச்சுக்கு எதிராக பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

வெற்றிக்குப் பிறகு பேசிய ஜோகோவிச், 'எனது வாழ்வின் சிறந்த சீசன் இது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய உள்நாட்டு வீரரான ஜானிக் சின்னரை வீழ்த்தி வாகை சூடியது சிறப்பானது. அரையிறுதியில் அல்கராஸுக்கு எதிராகவும், இறுதியில் சின்னருக்கு எதிராகவும் வெளிப்படுத்திய ஆட்டத்துக்காக பெருமையாக உணர்கிறேன்.

ஏனெனில், எனக்கும், மெத்வதெவுக்கும் பிறகு இந்த உலகின் சிறந்த டென்னிஸ் வீரர்களாக அவர்கள் இருவரும் இருக்கின்றனர். நான் போராடி வெல்லும் நிலையில் அவர்கள் ஆட்டம் சிறப்பானதாக இருந்தது' என்றார்.

முன்னதாக, ஏடிபி ஃபைனல்ஸ் போட்டியின் வரலாற்றில் இறுதிச்சுற்றுக்கு வந்த முதல் இத்தாலிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார் சின்னர்.



### இரட்டையர் பிரிவு



இப்போட்டியின் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் 6-ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் ராஜீவ் ராம்/பிரிட்டனின் ஜோ சாலிஸ்பரி இணை 6-3, 6-4 என்ற செட்களில், 5-ஆம் இடத்திலிருந்த ஆர்ஜென்டீனாவின் ஹொராசியோ ஜெபாலோஸ்/ஸ்பெயினின் மார்செலோ கிரனோலர்ஸ் கூட்டணியை சாய்த்து சாம்பியன் பட்டம் வென்றது.

### சாதனை சீசன்...

**இந்த சீசன், ஜோகோவிச்சுக்கு சாதனை சீசனாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.**

- நடப்பு சீசனை, ஆஸ்திரேலிய ஓபனில் 10-ஆவது முறையாக சாம்பியனாகி சாதனை படைத்ததுடன் தொடங்கினார் ஜோகோவிச்.
- பிரெஞ்சு ஓபனை கைப்பற்றி, ஸ்பெயினின் ரஃபேல் நடால் சாதனையை முறியடித்து, 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்ற முதல் வீரர் என்ற வரலாறு படைத்தார். பின்னர் யு.எஸ். ஓபனிலும் வென்று அதை 24 பட்டங்களாக அதிகரித்துக் கொண்டார்.
- இந்த ஏடிபி ஃபைனல்ஸ் போட்டியின் முதல் ஆட்டத்தில் வென்றதன் மூலம், 8-ஆவது முறையாக, ஒரு ஆண்டை உலகின் நம்பர் 1 இடத்தில் நிறைவு செய்யும் சாதனை படைத்துள்ளார் ஜோகோவிச். மேலும், உலகின் நம்பர் 1 இடத்தை 400 வாரங்களுக்கு தக்கவைத்த முதல் வீரர் என்ற பெருமையையும் அவர் பெறுகிறார்.
- கடந்த 15 ஆண்டுகளில், ஒரு சீசனின் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும், ஏடிபி ஃபைனல்ஸ் போட்டியிலும் இறுதி ஆட்டம் வரை வந்த ஒரே வீரர் ஆகியிருக்கிறார் ஜோகோவிச். அதையும் அவர் தற்போது 2-ஆவது முறையாகச் செய்திருக்கிறார். இதற்கு முன் 2015-ஆம் ஆண்டிலும் இந்த 5 போட்டிகளிலும் இறுதி ஆட்டம் வரை வந்துள்ளார் ஜோகோவிச்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# மகுடம் சூடிய ஆஸ்திரேலியா!

1987 1999 2003 2007 2015 2023

ம.விஸ்வநாதன்



# 3 டிகிரியை நோக்கி உலக வெப்பமேற்றம்!



EVA S

# உணவு பதப்படுத்தும் திட்டம்: தமிழகத்துக்கு மத்திய அரசு விருது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு



**சென்னை, நவ. 20:** உணவு பதப்படுத்தும் திட்டத்தில் சிறந்த செயல் திறனுக்கான விருது தமிழகத்துக்கு கிடைத்துள்ளது. இந்த விருது முதல்வரிடம் காண்பிக்கப்பட்டு பாராட்டு பெறப்பட்டது.

தமிழக அரசு சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

இந்திய உணவு பாரம்பரியத்தை அறிமுகம் செய்யவும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை இந்தியாவில் நிறுவவும் உலக உணவுத் திருவிழா, நவம்பர் முதல் வாரத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள், அரசுப் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்த நிகழ்ச்சியின் இறுதி நாளில், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்து செயல்பட்டு வரும் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசின் விருதை குடியரசுத் தலைவர் முர்மு வழங்கினார்.

இந்த விருதை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டது. விருதை முதல்வரிடம் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ. அன்பரசன் ஆகியோர் வழங்கினர். அப்போது, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் அர்ச்சனா பட்நாயக், தொழில் துறை ஆணையர் எல்.நிர்மல்ராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

EVA STALIN IAS ACADEMY